DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 111/2024** |
| Deposition of Witness for | : PW 8 |
| Name | : பெரியதாய் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 05.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 5th February 2026.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

முதல்விசாரணை:

நான் தற்போது சொக்கலிங்காபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்து வேலை செய்து வருகிறேன். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு என் கணவர் வேலுச்சாமி சங்கரன்கோவிலுக்கு சென்றார். நான் வீட்டில் இருந்தேன். வீட்டில் இருந்த எனக்கு எனது கணவர் மீது ஆட்டோ மோதி விபத்து ஏற்பட்டதாக அங்கிருந்த நபர்கள் போன் மூலம் தகவல் தெரிவித்தார்கள். தகவல் கிடைத்தவுடன் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு எனது கணவரை பார்க்க சென்றேன். எனது கணவர் மேல்சிகிச்சைக்காக ஹைகிரவுண்ட் ஆஸ்பத்திரிக்கு கூட்டிச்சென்றார்கள். அங்கு வைத்து எனது கணவர் இறந்துவிட்டார். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு புரட்டாசி மாதம் 12 ம் தேதி

எனது கணவர் இறந்துபோனார். இறந்துபோன எனது கணவரின் பிரேதத்தை சடலக்கூராய்வு செய்து எங்களுக்கு கொடுத்தார்கள். அதை பெற்றுக்கொண்டு ஊருக்கு வந்துவிட்டோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

எனது கணவருக்கு விபத்துநடந்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் குருக்கள்பட்டியில் வைத்து விசாரித்தார்கள்.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 111/2024** |
| Deposition of Witness for | : PW 9 |
| Name | : திரு.தங்கதுரை |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 05.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 5th February 2026.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.09.2014ம் தேதி 17.00 மணிக்கு நான் சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணியில் இருந்தபோது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்படி 18.00 மணிக்கு சென்று சிகிச்சையில் இருந்த சாகுல்ஹமீது மகன் அப்துல்காதர்என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவுசெய்து 19.30 மணிக்கு நிலையம் திரும்பி புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலையக்குற்ற எண்.185/2014 ச/பி.279, 337 இதச ன் கீழ் வழக்கு பதிவுசெய்தேன். அந்த முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் அசல் மற்றும் புகார் வாக்குமூலத்தை சங்கரன்கோவில்

நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அதன் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அதன் ஒரு நகலை விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். 29.09.2014 ம் தேதி காலை 6 மணிக்கு உதவி ஆய்வாளர் உத்தரவின்பேரில் இவ்வழக்கில் காயம்பட்டு மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேலுச்சாமி என்பவரின் இறப்பு தகவலை பெற்று அன்றைய தினம் காலை 8 மணிக்கு நிலையம் திரும்பி அந்த தகவலை உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். அவர் வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 மற்றும் 304(A)என மாற்றம் செய்தார். மாற்றம் செய்யப்பட்ட வழக்கு கோப்பை சங்கரன்கோவில் தாலுகா காவல் வட்டஆய்வாளரிடம் சமர்ப்பிக்குமாறு உதவி ஆய்வாளர் என்னை பணித்தார். அன்றைய தினம் காலை 9 மணிக்கு அந்த வழக்கு கோப்பை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். அன்றைய தினமே இறந்துபோன வேலுச்சாமியின் உடலை பொறுத்து பிரேத விசாரணை நிறைவுற்ற பிறகு அந்த உடலை பிரேத பரிசோதனைக்காக மருத்துவரிடம் ஒப்படைக்குமாறு காவல் ஆய்வாளர் என்னிடம் வேண்டுகோள் விண்ணப்பத்தை அளித்து அனுப்பிவைத்தார். மேற்படி விண்ணப்பம் மற்றும் இறந்துபோன வேலுச்சாமி உடல் ஆகியவற்றை நான் பிரேத பரிசோதனை செய்த மருத்துவரிடம் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனை முடிவுற்றபிறகு அன்றைய தினம் 15.00 மணிக்கு என்னிடம்திரும்ப ஒப்படைக்கப்படட வேலுச்சாமியின் உடலை அவரது உறவினர்களிடம் கொடுத்தேன். அதன்பிறகு 18.00 மணிக்கு நிலையம் திரும்பினேன். இது சம்பந்தாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்திற்கும், சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 9 கிமீ தூரம் இருக்கும். மேற்படி 9 கிமீ தொலைவை எவ்வளவு நேரத்தில் கடந்து வரலாம் என்றால் இருசக்கரவாகனத்தில் ½ மணி நேரத்தில் கடந்து வரலாம். அ.சா.1 யிடம் பதிவு செய்யப்பட்ட புகார் வாக்குமூலம் யாரால் எழுதப்பட்டது என்றால் அ.சா.1 என்னிடம் விபரங்களை கூற புகார் வாக்குமூலத்தை நான் எழுதினேன். நான் முதல் விசாரணையில் கிடைக்கப்பெற்றதாக சொல்லும் 29.09.2014 ம் தேதிய வேலுச்சாமியின்

இறப்பு தகவல் வாய்மொழியாக கிடைக்கப்பெற்றதா அல்லது எழுத்துமூலமாக கிடைக்கப் பெற்றதா என்றால் வாய்மொழியாக கிடைக்கப்பெற்றது. நான் முதல்விசாரணையில் கூறியதுபோல அ.சா.1 யிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும், இவ்வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**